# வர்த்தகத் தளங்களில் அதிரடிச் சோதனை

# டிபிகேஎல் நடவடிக்கை

கோலாலம்பூர்,நவ.2-

கெப்போங் வட்டாரத்தில் 4 வர்த்தகத் தளங்களில் பொது இடத்தில் வைக்கப்பட்டிருந்த விற்பனைப் பொருட்களை கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத் தரப்பு நேற்று பறிமுதல் செய்தது.

கெப்போங் கிளை மாநகர் மன்ற அலுவலகத் தரப்புடன் இணைந்து அமலாக்கத் தரப்பினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1974 சாலை, கால்வாய், கட்டட சட்டத்தின் கீழ் 4 கடைகள், ஒரு வியாபாரி மீது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தப் பறிமுதல் பொருட்கள் அனைத்தும் ஜாலான் லொம்போங்கில் உள்ள கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு தனது அறிக்கையில் விவரித்துள்ளது.